Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Advanced Level (2026)

# Higher 3
# Tamil Language and Literature
# உயர்தரம் 3
# தமிழ்மொழி, இலக்கியம்
# (Syllabus 9941)

**(First Year of Examination in 2026)**

© MOE 2026

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 3 |
| தேர்வு அமைப்புமுறை | 4 |
| தேர்வு விவர அட்டவணை | 6 |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | 7 |
| தாள் **2**-க்குரிய மதிப்பீட்டுத் திட்டம் | 9 |

## மதிப்பீட்டு நோக்கங்கள்

பல்கலைக்கழகப் புகுமுகநிலையில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின்வழிப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்களாகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

<u>**மொழித்திறன்கள்**</u>

**படித்தல்**

- பல்வேறு பனுவல்களை ஆழ்ந்து படித்துப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிருத்தல்

**எழுதுதல்**

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புக்கேற்ற கருத்துகளைத் தர்க்கரீதியாக ஆராய்ந்து தெளிவாகவும் தக்க சான்றுகளுடன் விரிவாகவும் கருத்து வளர்ச்சியுடனும் சுயபடைப்புத்திறன்கொண்டும் எழுதுதல்
- கொடுக்கப்படும் கருப்பொருள் அல்லது படம் சார்ந்த சூழலையொட்டி ஆர்வமூட்டும் வகையிலும் சுயபடைப்புத்திறன்கொண்டும் சிறுகதை அல்லது நாடகம் ஒன்றை எழுதுதல்
- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் கருத்திணைப்புக் குறிகளையும் பயன்படுத்திக் கட்டுரையை நிரல்பட எழுதுதல்

<u>**இலக்கியத்திறன்கள்**</u>

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் உணர்த்துபவனவற்றை ஆழ்ந்து புரிந்துகொண்டு அவற்றையொட்டிய தமது புரிந்துணர்வைத் திறனாய்வு நோக்கில் தெளிவாகவும் தொடர்புபடவும் சுயபடைப்புத்திறனுடனும் நுண்ணாய்வுச் சிந்தனைத்திறனுடனும் பகுத்தாராய்ந்து வெளிப்படுத்துதல்

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட இலக்கியப் பனுவல்களின் கதைக்கரு, கதைக்களம், கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, மொழி ஆளுகை, தலைப்புப் பொருத்தம், படைப்பாளர் கையாண்டுள்ள உத்திகள், படைப்பாளர் உணர்த்த விரும்பும் கருத்துகள் முதலிய இலக்கியக்கூறுகளைப் பகுத்தாய்ந்து திறனாய்வு நோக்கில் கருத்துகள் எழுதுதல்

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாத கவிதைகள், சிறுகதைகள், உரைநடைப் பகுதிகள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்துணர்ந்து அவற்றைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுதல்

## தேர்வு அமைப்புமுறை

உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியத் தேர்வு மொத்தம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

<u>வினாத்தாள் 1: கருத்து வெளிப்பாட்டு வரைவு</u> **(50 மதிப்பெண்கள், 50%) (மின்னியல் தேர்வு)**

2026-ஆம் ஆண்டுமுதல் வினாத்தாள் 1 மின்னியல் தேர்வாக அமையும். தேர்வெழுதுவோர் ‘முரசு அஞ்சல்’ மென்பொருளைப் பயன்படுத்தித் தங்கள் கட்டுரையைத் தட்டச்சிட்டு அதை மின்னியல் தேர்வுத்தளத்தின்வழியே சமர்ப்பிப்பர். இப்பகுதியில் கொடுக்கப்படும் மூன்று தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதன் விடையை 400 சொற்களுக்குக் குறையாமல் தட்டச்சிடவேண்டும். இத்தலைப்புகள் படைப்பாக்கத்திறன் சார்ந்ததாகவும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பையொட்டி விவாதித்துக் கருத்துரைப்பதாகவும் அமைந்திருக்கும்.

- **படைப்பாக்க வரைவு**
  கொடுக்கப்பட்டுள்ள ஒரு கருப்பொருளை அல்லது படம் சார்ந்த சூழலையொட்டிச் சிறுகதை அல்லது நாடகம் ஒன்றை எழுதவேண்டும்.

- **கருத்துரை வரைவு**
  கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பையொட்டி ஆராய்ந்து விவாதித்துக் கருத்துரைக்கவேண்டும்.

கருத்து வளம், கற்பனைத்திறன், படைப்பாக்கத்திறன், மொழித்திறன், அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் படைப்பு மதிப்பிடப்படும்.

<u>வினாத்தாள் 2: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு</u> **(50 மதிப்பெண்கள், 50%)**

இலக்கிய வினாக்களை அடிப்படையாகக்கொண்ட இப்பகுதி ‘**அ**’, ‘**ஆ**’ ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

- **‘அ’ பிரிவு:** திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)

- **‘ஆ’ பிரிவு:** திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (பார்த்திராத சிறுகதை, கவிதை, உரைநடைப் பகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது)

**‘அ’ பிரிவு: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு** (25 மதிப்பெண்கள், 25%)
<u>(பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)</u>

இப்பிரிவில் 4 வினாக்கள் இடம்பெறும். பரிந்துரைக்கப்பட்ட சிறுகதை நூலிலிருந்து இரண்டு வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூலிலிருந்து இரண்டு வினாக்களும் இடம்பெறும். தேர்வெழுதுவோர் இப்பிரிவிலிருந்து **ஒரு வினாவிற்கு மட்டும்** விடையளிக்கவேண்டும். இவ்வினாத்தாள் திறந்த புத்தக மதிப்பீட்டு முறையில் அமைந்திருக்கும்.

**பரிந்துரைக்கப்பட்டுள்ள சிறுகதை நூல்**

- தூண்டில் மீன்
  ஆசிரியர்: திரு மா. இளங்கண்ணன்

**பரிந்துரைக்கப்பட்டுள்ள இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூல்**

- தமிழின்பம்
  ஆசிரியர்: டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

**'ஆ' பிரிவு: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு** (25 மதிப்பெண்கள், 25%)
(பார்த்திராத சிறுகதை, உரைநடைப் பகுதி, கவிதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது)

இப்பிரிவில் 2 வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் இப்பிரிவிலிருந்து **ஒரு வினாவிற்கு மட்டும்** விடையளிக்கவேண்டும். தேர்வெழுதுவோர் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கவிதை/சிறுகதை/உரைநடைப் பகுதியைப் படித்து அவற்றுள் ஏதேனும் **ஒரு வினாவை மட்டும்** தேர்ந்தெடுத்துத் திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு செய்து விடையெழுதவேண்டும்.

கருத்து வளம், திறனாய்வு நோக்கு, மொழித்திறன், அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் படைப்பு மதிப்பிடப்படும்.

## தேர்வு விவர அட்டவணை

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை உயர்தரம் 3 தமிழ்மொழி (9941)

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| 1<br>**(மின்னியல் தேர்வு)**<br><br>(1 மணி 15 நிமிடங்கள்) | **கருத்து வெளிப்பாட்டு வரைவு**<br>(400 சொற்களுக்குக் குறையாமல்)<br><br>வகைகள்: படைப்பாக்க வரைவு, கருத்துரை வரைவு | கட்டுரை | 3<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **50 (50%)** |
| 2<br><br>(1 மணி 45 நிமிடங்கள்) | <u>'அ' பிரிவு</u><br>**திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு**<br>(பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)<br><br>'தூண்டில் மீன்' எனும் சிறுகதை நூலிலிருந்து இரு வினாக்கள்<br><br>'தமிழின்பம்' எனும் இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூலிலிருந்து இரு வினாக்கள்<br><br><u>'ஆ' பிரிவு</u><br>**திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு**<br>(பார்த்திராத சிறுகதை, கவிதை, உரைநடைப் பகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது) | சுயவிடை<br><br><br><br><br><br><br><br><br>சுயவிடை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்)<br><br><br><br><br><br><br><br>2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **25 (12.5%)**<br><br><br><br><br><br><br><br><br>**25 (12.5%)** |

## கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

**பொருள் (25 மதிப்பெண்கள்)**

| நிலை / விளக்கம் | வகை 1<br>19 - 25 | வகை 2 (மேனிலை)<br>16 - 18 | வகை 2 (கீழ்நிலை)<br>13 - 15 | வகை 3 (மேனிலை)<br>10 - 12 | வகை 3 (கீழ்நிலை)<br>7 - 9 | வகை 4<br>1 - 6 |
|---|---|---|---|---|---|---|
| **கருத்து வளம்** | ▪ மிகச் சிறந்த கருத்துகளும் விரிவான விளக்கமும் | ▪ பல நல்ல கருத்துகளும் பெரும்பாலும் விரிவான விளக்கமும் | ▪ போதுமான கருத்துகளும் ஓரளவு விரிவான விளக்கமும் | ▪ ஓரளவு போதுமான கருத்துகள் இருப்பினும் போதுமான கருத்து விளக்கம் இல்லாதிருத்தல் | ▪ குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும் | ▪ மிகக் குறைந்த அளவு கருத்துகளும் தெளிவற்ற விளக்கமும் |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமிக்கது<br>▪ மிகவும் கவரும் தன்மைமிக்கது; கற்பனைத்திறன் மிக்கது<br>▪ சுய படைப்புத்திறன் மிக்கது | ▪ பெரும்பாலும் பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் கவரும் தன்மையுடையது<br>▪ ஓரளவு சுய படைப்புத்திறன் மிக்கது | ▪ பொருத்தமிக்கது<br>▪ ஏற்புடையதாயினும் அவ்வளவாக ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ முழுதும் பொருத்தம் இல்லாதது |
| **கருத்து வளர்ச்சி** | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ போதுமான அளவு கருத்து வளர்ச்சி | ▪ கூறியது கூறல்; சில இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கூறியது கூறல் அதிகம் இடம்பெற்றிருத்தல்; கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ தெளிவற்ற, முரண்பட்ட, குழப்பமான கருத்துகள் |

**மொழியும் அமைப்புமுறையும் (25 மதிப்பெண்கள்)**

| நிலை / விளக்கம் | வகை 1<br>19 - 25 | வகை 2 (மேனிலை)<br>16 - 18 | வகை 2 (கீழ்நிலை)<br>13 - 15 | வகை 3 (மேனிலை)<br>10 - 12 | வகை 3 (கீழ்நிலை)<br>7 - 9 | வகை 4<br>1 - 6 |
|---|---|---|---|---|---|---|
| | ▪ மிகச் சிறந்த மொழித்திறன் | ▪ சிறந்த மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ மொழித்திறன் சராசரி நிலைக்குக்கீழ் இருத்தல் | ▪ மொழித்திறன் மோசமாக இருத்தல் |
| **இலக்கணம்** | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள் | ▪ பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ பல பெரும் பிழைகள்; பிழைகளைத் தவிர்க்கும் பொருட்டு எளிய மொழிக்கூறுகளைப் பயன்படுத்துதல் | ▪ படித்துப் புரிந்துகொள்ள இயலாத அளவிற்குப் பெரும் பிழைகள் மலிந்திருத்தல் |
| **சொல்லாட்சியும் வாக்கிய அமைப்பும்** | ▪ மிகப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொதுவாகப் பொருத்தமான சொல்லாட்சி<br>▪ பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ எளிய சொல்லாட்சி<br>▪ எளிய வாக்கிய அமைப்புகள் | ▪ மிக எளிய சொல்லாட்சி<br>▪ ஒரே வகையான சிறு வாக்கியங்கள் | ▪ மிக எளிய சொற்களைப் பயன்படுத்துதல்<br>▪ வாக்கிய அமைப்பில் அதிகப் பிழைகள் |
| **அமைப்புமுறை** | ▪ மிகச் சிறந்த பத்தியமைப்பும் | ▪ சிறந்த பத்தியமைப்பு | ▪ பொருத்தமான பத்தியமைப்பு | ▪ ஓரளவு பொருத்தமான பத்தியமைப்பு | ▪ பத்தியமைத்து எழுதுவதில் இடர்ப்பாடு | ▪ பொருத்தமற்ற பத்தியமைப்பு |

## தாள் 2-க்குரிய மதிப்பீட்டுத் திட்டம்

**வகைக்குரிய விளக்கம் (Band Descriptors)**

| வகை | விளக்கம் |
|---|---|
| **1**<br>**(21 – 25)** | ▪ மிகவும் சிறப்பாக அமைந்த விடை. விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திப் பகுத்துணர்ந்து கூறுவதோடு மட்டுமல்லாமல் தம் சொந்த கருத்துகளையும் கூறுதல். அதில் சில வேளைகளில் சுயபடைப்பும் இருத்தல்<br>▪ ஆழமான ஆய்வின்வழி பனுவலோடு தொடர்புகொள்ளுதல்<br>▪ விடையில் அறிவு முதிர்ச்சியும் தெளிவும் இருத்தல்<br>▪ விடை நிரல்படத் தொடர்ச்சியாக இருத்தல்<br>▪ கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கரு ஆகியவற்றை நன்கு அறிந்திருத்தல்<br>▪ மேற்கோள்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்<br>▪ விடையின் நடை, கடினமான கருத்துகளை எளிமையாக விளக்கிக் கூறும் தன்மையும் எழிலும் சரளமும் மிகுந்த ஒன்றாக இருத்தல் |
| **2**<br>**(17 – 20)** | ▪ சிறந்த விடை. விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திப் பகுத்துணர்ந்து கூறுவதோடு மட்டுமல்லாமல் தம் சொந்த கருத்துகளையும் கூறுதல்<br>▪ ஆய்வின்வழி பனுவலோடு தொடர்புகொள்ளுதல்<br>▪ விடை தொடர்ச்சியாக இருத்தல்<br>▪ கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கரு ஆகியவற்றை அறிந்திருத்தல்<br>▪ மேற்கோள்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்<br>▪ கடினமான கருத்துகளைச் சரியாக எடுத்துரைப்பதோடு விடையின் நடை தெளிவாகவும் சரளமாகவும் இருத்தல் |
| **3**<br>**(13 – 16)** | ▪ நன்கு அமைந்த விடை. விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திப் பகுத்துணர்ந்து கூறுவதோடு மட்டுமல்லாமல் சில சொந்த கருத்துகளையும் கூறுதல்<br>▪ நூல் ஆய்வு செய்யப்பட்டிருப்பினும் அது சில சமயங்களில் வரிக்கு வரி செய்யப்பட்டதாக இருத்தல்<br>▪ விடை தொடர்ச்சியாக இருத்தல்<br>▪ கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கரு ஆகியவற்றை அறிந்திருத்தல்<br>▪ மேற்கோள்களைப் பெரும்பாலும் பொருத்தமாகப் பயன்படுத்துதல்<br>▪ கேள்வியைப் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் தெளிவாக எடுத்துரைத்தல் |

| | |
|---|---|
| **4**<br><br>**(9 – 12)** | ▪ திருப்தி அளிக்கும் விடை. விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திக் கூறுவதோடு மட்டுமல்லாமல் சில சொந்த கருத்துகளையும் கூறுதல்<br>▪ நூல் ஆய்வு வரிக்கு வரி அமைந்திருத்தல்<br>▪ விடையைப் பகுத்துணர்ந்து கூறும் ஆற்றல் குறைவாக இருத்தல். விடை, பெரும்பாலும் கருத்துகளை எடுத்துரைக்கும் முறையிலே அமைந்திருத்தல்<br>▪ கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருத்தல்<br>▪ மேற்கோள்களைப் பயன்படுத்துதல், ஆனால் சில சமயங்களில் தவறாகப் பயன்படுத்துதல்<br>▪ பெரும்பாலும் கேள்வியைப் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் சாதாரண நடையில் எடுத்துரைத்தல் |
| **5**<br><br>**(5 – 8)** | ▪ சீராக அமையாத விடை. பனுவலோடு தொடர்புபடுத்திக் கூறும்போது ஓரளவு புரிந்துணர்வு இருப்பதாக நாம் அறிந்துகொள்ளலாம்.<br>▪ முதலில் வினாவிற்கு ஏற்ப விடையைத் தொடங்குதல் பிறகு அதிலிருந்து விலகிச் செல்லுதல்<br>▪ விடையை நன்கு ஆராய்ந்து எழுதாமல் கருத்துகளை வெறுமனே குறிப்பு முறையில் எழுதுதல்<br>▪ கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருந்தாலும் அவற்றைப் பனுவலோடு தொடர்புபடுத்த அறியாதிருத்தல்<br>▪ மேற்கோள்களைப் பல இடங்களில் தவறாகப் பயன்படுத்துதல்<br>▪ மிகச் சாதாரண நடை |
| **6**<br><br>**(1 – 4)** | ▪ சுருக்கமாக, கருத்து வளர்ச்சி இல்லாத வெறுமனே குறிப்பு முறையில் எழுதுதப்பட்ட விடை<br>▪ பனுவலை வினாவோடு தொடர்புபடுத்தச் சிறு முயற்சி செய்தல்<br>▪ மிகச் சாதாரண நடை |
| **7**<br><br>**(0)** | ▪ வினாவையொட்டி எந்தக் கருத்துகளும் இல்லாதிருத்தல்<br>▪ பனுவலோடு தொடர்புபடுத்தாதிருத்தல் |